# சுட்டி

25 காச

மாத இதழ்

4

15, மே
1981

www.thamizham.net - Free E Books No TM 14703

www.thamizham.net - Free E Books No TM 14703

## சுட்டியாரின் பதில்கள்

சுட்டி எப்போது வாரப்பத்திரிகையாக மலரும்?

—அ. கமலக்கண்ணன், சென்னை-3

இந்தக் கேள்வியை உங்களைப்போல ஆயிரக்கணக்கானோர் எழுப்பும் போதுதான்.

ஒருவன் சிறந்த அரசியல்வாதி, சிறந்த பத்திரிகையாளன், சிறந்த மாணவன், சிறந்த ஆசிரியர் என்பதை எவ்வாறு அறிந்து கொள்வது?

—லில்லிபுட், சென்னை-1

இவர்கள் எல்லோரும் நிச்சயம் சிறந்த மனிதர்களாக இருப்பார்கள்.

புதுமையான செய்திகளை இன்னும் எத்தனை காலத்திற்கு உங்களால் போடமுடியும்?

—குருமூர்த்தி, சென்னை-33

உலகம் அழியும்வரை புதுமையான செய்திகள் வந்து கொண்டிருக்கும்.

சென்ற சுட்டியில், குமுதம்பற்றி வந்த கட்டுரையை குமுதம் அப்படியே வெளியிட்டிருப்பது எதைக் காட்டுகிறது?

—காசி, சென்னை-41

அது எவ்வளவு தூரம் மரத்துப் போயிருக்கிறது என்பதைத்தான்.

விளம்பரப்படி மாதம் ரூ. 20/- மட்டுமே பெறும் ஆளால் படித்துப் புரிந்துகொள்ளும் வகையில் சுட்டியின் கட்டுரைகளில் எளிமையுண்டா? நெஞ்சில் கைவைத்துச் சொல்லும்.

ரூ. 20/-க்கு மேல் வருவாய் வாங்குவோரும் சுட்டியைப் படிக்கிறார்களே. எனினும் இன்னும் எளிமையாகச் சொல்ல முயல்கிறோம். அது சரி, உங்கள் ஊர் பெயர் எழுத நெஞ்சில் துணிவின்றி 4 பக்க விமர்சனக் கடிதமெழுதியிருக்கிறீர். சுட்டிப்பயல் சிங்கமோ புலியோ அல்ல; வெளியே வாரும்.

www.thamizham.net - Free E Books No TM 14703




25 காசிற்கு சிங்கிள் டீயே கிடைக்காத நாளில், இந்த விலையில் முற்றிலும் மாறுபட்ட நல்ல கருத்துக்களைக் கொடுத்திருப்பது ஆச்சரியத்தை அளிக்கின்றது. இதற்குத் தமிழ் வாசகர்கள் ஆதரவு அளிக்கவில்லையென்றால் சமுதாயத்தில் சாக்கடைகள்தான் மணக்கும்.

*—இரா. முரளி, 1, இராமானுஜம் தெரு, சென்னை-11*

நீண்ட வருடங்களுக்குப் பிறகு ஒரு விடியல் வெய்யிலின் ருடலை சுட்டியின் மூலம் பெற்றேன். எக்காரணம் கொண் ம் அமைவை மாற்றாதீர்கள்.

*—பா. வேணுகோபால், 102 துளசிங்க தெரு, சென்னை-11*

சான்றாண்மையையும், புகைப் பிடிப்பையும் நோக்கி ஒரு றள் வெளியிட்டுள்ளீர்கள். இது மிக அதிகமான நல் லாரை புகை பிடிக்கும் நல்லோரைப் புண்படுத்துகிறது.

*—பேராசிரியர் விசுவேசுவரன், ஜெயின் கல்லூரி, சென்னை-96*

அனைவரையும் சிறிதும் அஞ்சாமல் சுட்டிக்காட்டும் ம்மை குண்டர்படை தாக்கலாம் எதற்கும் பாதுகாப்புடன் சயல்படுங்கள்.

*—ஜெயக்குமார், 4, 2-வது தெரு, ஜமீன் பல்லாவரம்.*

துரு துருவென இருக்கும் ஒரு குழந்தையைக் கொஞ்சு து போன்ற குதூகலமே நெஞ்சில் தொக்கி நிற்கிறது — ட்டியைப் பார்க்கும்போது.

*—த. சத்தியநாராயணன், 38, குருவப்பமேஸ்திரி தெரு, அயன்புரம்*

சுட்டி கெட்டி என்பதை ஒவ்வொரு பக்கமும் நிரூபிக் றது. ஆத்மார்த்தமாக ஈர்க்கப்பட்டேன்.

*—பேராசிரியர். பகவத்சிங், அரசுக் கலைக் கல்லூரி, ஊட்டி.*



www.thamizham.net - Free E Books No TM 14703

# " சென்னைப் பல்கலைக்கழகத்தைக் காப்பாற்றுங்கள் "

124 வருடப் பழமையான சென்னைப் பல்கலைக் கழகம் என்றுமில்லாத அளவிற்கு இப்போது சந்தி சிரித்துக்கொண்டிருக்கிறது.

இந்தப் பல்கலைக் கழகம் மாணவர், ஆசிரியர், கல்வியாளர் இவர்களின் நலத்துக்கு அந்நியமாகிப் போயி, பணமுதலைகள், அரசியல்வாதிகள், சுரண்டல் பெருச்சாளிகள் இவர்களின் இருண்ட கோட்டையாகிவிட்டது.

இவர்களோ, இவர்களின் பிரதிநிதிகளோ தான் சிண்டிகேட்; இவர்களே பார்த்து பணம் செலவழித்து உறுப்பினராக்கும் ஆமாஞ்சாமி பட்டாளமே 300 பேர் கொண்ட செனட்; உப்புக்குச் சப்பாணியான அகடமிக் கவுன்சில்.

சிலர் நலத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கென்றே பலமாக பாதுகாக்கப் படும், பிற்போக்கு பாடத்திட்டங்கள்; ஊரை ஏமாற்றும் தேர்வு முறைகள்; ஒவ்வொரு மில்லிமீட்டரிலும் லஞ்சமும், கயமையும்.

இந்த அருவருப்பான பல்கலைக் கழகத்தில் உள்ள உதவாக்கரைத்தனத்தின் எதிரொலியே மாணவர் போராட்டங்கள்; தேர்வுக் குழப்பங்கள்; ஒழுங்கீனங்கள்.

ரூ. 249 கோடி கல்வித்துறைக்கு அரசு செலவிட்டிருக்கிறது, இது மொத்த பட்ஜெட்டில் 22% இருப்பினும் பல்கலைக்கழகம் என்னும் அசுரன் தனது வெட்டிச் செலவுகள் காரணமாய் ஆண்டுக்கு ஆண்டு தேர்வுத் தொகையை அதிகரித்து வருகிறது. கரூராய் வசூலிக்கிறது. திருத்தும் ஆசிரியர்க்கோ கால் நூற்றாண்டாய் கிட்டதட்ட அதே கூலி. பணம்பெற ஓராண்டு இழுத்தடிப்பு.

ஆண்டுக்கு ஆண்டு தவறுகளில், ஊழல்களில் புதுமைகள். 100க்கு 120 மார்க் வாங்கும் மாணவர்கள், கல்லூரி முழுவதும் அனைவரும் தோல்வி என்ற அறிவிப்புகள் ; அடுத்த தேர்வு வந்தும் முன் தேர்வு முடிவு வெளிவரா வேடிக்கை. கேட்டால், வாயில்லா, கம்ப்யூட்டர்மேல் பழியைத் தூக்கிப்போட்டு ஒதுங்கும் புது உத்தி.

கடந்த 31 ஆண்டுகளாக பல்கலைக்கழகத்தின் ஏதாவது பதவியில் ஒட்டியிருக்கும் பெருந் தொழிலதிபர், இன்றைய துணைவேந்தர்மேல் பட்டியலாக வந்துள்ள ஊழல்கள் ஊருக்கு வெளிச்சம். அவர் மட்டுமேயல்ல, அவருக்குப் பின்னால் ஒரு பெருச்சாளிக் கூட்டமே பல்கலைக் கழகத்தைச் சுரண்டிக் கொண்டிருக்கிறது.

இதன் விளைவே இன்று கீறல் விட்டுப்போய், துருப்பிடித்துப்போய், அழுகி நாற்றமடித்து, அதல பாதாளத்தில் அழுந்திக் கொண்டிருக்கும் அவல நிலை.

பல்கலைக்கழகத்தைக் காப்பாற்ற 1.5 இலட்சம் மாணவர்கள் பத்தாயிரம் ஆசிரியர்கள், கல்வித்துறை நல்லவர்கள் ஓரணியாய்த்திரண்டு அத்தனைத் தங்கள் வசமாக்கும் நாள் நெருங்கிவிட்டது!

—எழில்

www.thamizham.net - Free E Books No TM 14703




உலகமெங்கும் மே-1 தொழிலாளர் தினமாக்கொண்டாடப் பட்டாலும், அமெரிக்கா, கனடா, இத்தாலி ஆகியநாடு களில் இக் கொண்டாட்டங்கள் மே-1 இல் தடை செய்யப்பட்டுள்ளன. அதற்குப் பதிலாக ரோமின் ஆரம்ப நாளே தொழி லாளர் தினமென அங்கீகரிக்கப்பட்டது.

அன்று சிகாகோ நகரத் தொழிலாளர்கள் மிக அடிப் டையான கோரிக்கைக்காக முதலில் போர்க்குரல் எழுப்பி, ரத்தம் சிந்தின நாள் இந்நாள்.

1889-இல் முதல் பாரிஸ் காங்கிரஸ் அகில உலக ரண்டாவது சோஷலிச மாநாட்டுக் கூட்டத்தில்தான் தற்கண் மே-1 ஐ அகில உலக கொண்டாட்டமாக அறி விக்கப்பட்டது. அது எந்தக் கிழமையில் வந்தாலும் விடு றை ஆக்கிக்கொள்வது என அந்த மாநாடு அறிவித்தது.

இந்தியா, ருஷ்யா போன்ற நாடுகளில் மே-1 விடுமுறை ாக அரசு அறிவித்திருக்கிறது. ஆனால் பிரிட்டனில் மே-1 ஆம் தேதிக்குப்பிறகு வரும் முதல் ஞாயிறன்றுதான் கொண் டாடப்படுகிறது. அமெரிக்காவில் செப்டம்பரில் வரும் முதல் திங்கள்தான் தொழிலாளர் தினம். இந்த தினத்தை விடு றையாக்க 8 ஆண்டுகள் அந்நாட்டில் தொழிலாளர்கள் போராடியிருக்கின்றனர். தற்போது அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் தொழிலாளர் தினத்தன்று கடைகள், அலு லகங்கள், தொழிற்சாலைகள், சுற்றுலாப் பகுதிகள் கூட் டங்கள், விளையாட்டுகள் அனைத்தும் ரத்து செய்யப்படு கின்றன. தொழிலாளர்கள்மேல் துப்பாக்கிச்சூடு நடத்தும் மது அரசுகளும், சுரண்டும் முதலாளிகளும் வெகு ஆடம்பர ாக இங்கு தொழிலாளர் தினம் நடத்திவருவது வேடிக்கை. ப்ரல் 1 போல, மே 1-ம் தொழிலாளர்களைப் பொருத்த ரை முட்டாள் தினமாகக் கூடாது. —ஸ்டெனிஸ்லாஸ்


www.thamizham.net - Free E Books No TM 14703

## டோல்பூரின் மாதர் வியாபாரம்



ஆக்ராவிலிருந்து 52 கி.மீ. தொலைவிலுள்ள டோல்பூர் சதைவியாபாரத்தின் கேந்திரம். விபச்சாரிகளின் உற்பத்திதானம். ஒவ்வொரு வருடமும் விலங்குகளைப் போல் பெண்களை வாங்கவும் விற்கவும் இங்கு அகில இந்திய சந்தை கூடுகிறது. விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்ட பெண்களும் புதிதாகக் கடத்தப்பட்ட பெண்களும்தான் இதன் விற்பனைச் சரக்குகள். தொலைவிடங்களிலிருந்து பெண் வாங்கவரும் அன்னியர்களிடம் விவரம்தெரிந்த பெண்களை விற்பதில்லை. கடத்தப்பட்ட பெண்கள் 10 நாட்களுக்குள் விற்கப்படுகின்றன. விற்பனையாகா பெண்கள் கிடங்குகளில்முடக்கப்படுகின்றனர். இவ்வியாபாரிகளிடமிருந்து தப்ப முடியாமல் மன நோயாளிகளான பெண்கள் அநேகம். எனவே, சரக்குக்கேற்றபடி பேரமும் பேசப்படுகிறது. வாடிக்கையாளர்களுக்குப் பெண்கள் தள்ளுபடியில் விற்பனையாவதுமுண்டு. புதிதாக ஒரு பெண்ணை வாங்குமுன் வாக்குமூலத்தில் அப்பெண்ணே விற்பனைக்கு உடன்பட்டதாக பதிவு செய்யப்படுகிறது. "பெண் வியாபாரம் இங்கு பழமையான தொழில் இங்குள்ள கொள்ளைகாரர்களைப் பிடிப்பதை விடவா இவ்வியாபாரிகளைப்பிடிப்பது முக்கியம்?" என்கிறார் ஒரு போலீஸ் அதிகாரி. இச்சந்தையின் நிலவரப்படி ஒரு பெண்ணின் விலை ஒரு பஞ்சாப் எருமையின் விலையில் பாதி! இவ்வியாபாரத்தில் ஏமாற்று வேலைகளே இல்லையாம்! புரையோடிப்போன இந்த சமூக நோயை வெளிச்சமாக்கியவர் இந்தியன் எக்ஸ்பிரஸின் நிருபர் அஸ்வினி சாரின். இவரது பேறு இச்சமூக அநீதியைக் கிழித்தெறிந்து சுப்ரீம்கோர்ட்டில் ரிட்மனு ஒன்றையும் தாக்கல்செய்து நேர்மையான விசாரணையைக் கோரியுள்ளது.

பத்திரிகையாளரால் துப்புதுலக்க துயிலெழுப்பப்பட்டுள்ள புலனாய்வுத் துறையினர் மீண்டும் உறங்கிவிடமாட்டார்கள் என்று எதிர்பார்க்கலாமா?

—இந்தியன் எக்ஸ்பிரஸிலிருந்து: நிலா—

www.thamizham.net - Free E Books No TM 14703

# அயல் நாட்டின் தமிழ்க் கவிதைகள்:

## திருப்பம்

முதாய முட்களுக்கு
நடுவே உள்ளத்தில்
மென்மையைத்
தூண்டிய, அழகு
'ராஜாவைத்
தூய தமிழ் உணர்வில்
ரோசா' வென
அழைத்தேன்!
கிராமத்தான்
என அதுவும்
முகம் திருப்பியது. —கேசவன்

## விளக்கு எரிகிறது

எரியும் திரியில்
எண்ணெயில்லாமல்
அந்த அறை
மங்கிக் கொண்டிருந்தது
அவள் குடலில்
அந்த 'எண்ணெய்'
எரிந்து கொண்டிருந்ததால்
அவள் கண்களில்
விளக்கு
எரிந்து கொண்டிருந்தது.

—பத்மினி ராஜமாணிக்கம்

## ...ற்கள்-ஒரு பார்வை

...ாவரசியல் வாதியின்
அந்தரங்கப் பணியாளாய்
அவலை மெல்லத் துணை நிற்கும்
இவை
...வறும் வாயில்
அவலை மெல்லும் போது
...லும் பொடிந்து
செந்நீர் உதிர்க்கும்.

—எம். ஏ. இளஞ்செல்வன்

## வானவில்

"இருமித் தொலைத்து
சளியைச் சிந்திய
மேக நோயாளியே,
இந்தா ஏழு மாத்திரைகள்!
இறங்கும் உன்
உபாதைகள்!" என்கிறாயா
சூரிய மருத்துவனே?

—சிங்கை. க. இளங்கோவன்

✿ மலேசியா, சிங்கப்பூர் புதுக்கவிஞர்களின் படைப்புகள் இவை.

www.thamizham.net - Free E Books No TM 14703

## மசாலா பத்திரிகைகள் :



தினமணி கதிர் ஒரு நலிந்த நோயாளிப் பாம்புதான். எனினும் அது உயிரோட்டமாக நெளிந்து கொண்டிருந்த காலங்களில் நமது தமிழ் வாசகர்களை அதன் பாதிப்புகள் தொட்டிருக்கின்றன. இதன் முதலாளிகளின் வெறுப்பு விருப்புகளுக் கேற்ப, இதன் ஆசிரியர்கள் மாறிக்கொண்டிருப்பர். துமிலன், சிவராமன், சாவி, வாசுதேவன் கடைசியாக இன்று எவ்வளவு நாளைக்கோ நா. பார்த்தசாரதி. (எச்சரித்து மெமோ வந்துவிட்ட

வியாபார ரீதியாக சாவியின் காலம் பொற்காலம். குமுதம் செய் அசிங்கங்களை இன்னும் நீள அகலத்தில் பெரிதாக்கி, இச்சைகளைக் கொச்சை படுத்தி சர்குலேஷனை சாவி உயர்த்திக் காட்டினார். அன்றைய ஆளுங்கட்சிக் சோப்புப்போட நிர்வாகம் சாவியைப் பயன்படுத்தியது, அதனைத் தானும் பய படுத்தி கருணாநிதிக்கு நெருக்கமாகி நிறைய வசதிகளைச் சம்பாதித்து கொண்டார்.

இன்றைய ஆசிரியர் நா. பா., 1979-இல் எழுத்தாளர் சங்க மாநா டில்...அதன் செயலராக இருந்தபோது, புஷ்பா தங்கதுரை, சிவசங்க இந்துமதி, சுஜாதா போன்ற பிரபல எழுத்தாளர்களை ஆபாசக்காரர்கள் என் உரத்த குரலில் மேடையில் விளாசினார். அதனைத் தொடர்ந்து, கல்கிய அவர் எழுதிய சிறுகதையொன்றில் ரோஜா செல்லத்துரை, கஜாதா, கெ மனோகரி என்று இவர்களுக்குப் பெயர்சூட்டி, தனது கதாபாத்திரங்க வைத்து திட்டித்தீர்த்தார்.

அக்டோபர் 79, விஜயதசமியன்று நா. பா. கதிரின் ஆசிரியரானு உடன் பெரிய அளவில் விளம்பரத்துடன் சிவசங்கரியின் சுவையைப்போட்டா கிட்டத்தட்ட அவரால் குதறப்பட்ட அத்தனை பெரிய எழுத்தாளர்களின் கை களையும் வெளியிட்டுக் கொண்டார். நா. பா.வுக்கும் ''பொய்ம்முகங்கள் உண்டா?

நா. பா, விழுந்து வரும் கதிரின் விற்பனையை உயர்த்த கைக்கொண் கடைசி கடைத்தரமான உத்தி சமூக இதழ்கள், என்ற பெயரில் வெளியிட் சாதி மறுமலர்ச்சிக்குப்பைகளாகும்.

ஜூன் 20 அன்று இந்தியன் எக்ஸ்பிரஸ் குரூப் மூடப்பட்டு விடும் எ நிர்வாகம் அறிக்கை விட்டிருக்கிறது. தினமணி கதிரும் அத்தோடு அஸ்தம மாகிவிடுமா? அங்குள்ள தொழிற்சங்கத்தைப் பணிய வைக்கும் தந்திரே இது. கோயங்கா அவ்வளவு சீக்கிரம் பொன் முட்டையிடும் வாத்தை அறுத்துவிடமாட்டார். (அடுத்து ராணி)

—எழி



www.thamizham.net - Free E Books No TM 14703

ை அறிப்பு:

# புகையிலை இறக்குமதியா! ஐயோ, வேண்டாம்!

*அகில உலகிலும் உள்ள புகைஞர்கள் அனைவரும் சேர்ந்து ரு நாளைக்கு 225 கோடி ரூபாய் பெறுமானமுள்ள கரெட்டைப் புகைத்துத் தள்ளுகிறார்கள்.*

*—ஆதாரம்: ஜூலை 80, ரீடர்ஸ் டைஜெஸ்ட்*

இவர்களுக்குத் தட்டுப்பாடில்லாமல் சரக்கைக் குவிப்பன ரம்மாண்டமான புகையிலைக் கம்பெனிகள். அவற்றில் பல, மெரிக்காவின் ஆதரவில் இந்தியா போன்ற மூன்றும் லக நாடுகளுக்குக் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமான ள்ள வர்ஜீனியா புகையிலையை ஏற்றுமதி செய்கின்றன.

ஒரு பக்கம் அமெரிக்கா, பொது சுகாதாரத் துறையின் லமாகப் புகையின் தீமைகளை மக்களுக்கு எடுத்துச் சொல் றது. மறுபக்கம் விவசாயத்துறை மூலமாக ஏராளமான பாருளை (நடப்பு ஆண்டுக்கு 4000 கோடி) புகையிலை சாகு டியாளர்க்குக் கடனுதவி செய்து ஊக்குவிக்கின்றது. ஏனிந்த ரட்டை வேடம் என்றுதான் கேட்கிறோம்.

முன்பெல்லாம் உலகில் பெருஞ் சாவுகளுக்குக் காலரா, டயாய்டு முதலிய கொள்ளை நோய்களே காரணமாக இருந் ன. இப்போது பெரும்பாலான சாவுகள் புகையிலை சம்ப த்தால் வருவனவே என்று பிரிட்டிஷ் மருத்துவர்கள் 'hysicians of British Royal College] முடிவுசெய்து வெளி ட்டிருக்கிறார்கள். இதனால் அமெரிக்காவில் புகை பிடித் லைக் கைவிட்டவர்களின் எண்ணிக்கை லேட்சத்துக்குமேல் ாகிறது. எனவே இந்தத் தீய பொருளை ஏற்றுமதி செய் து சரியா என்பதை அந்நாடுகள் சிந்தித்துப் பார்க்க ண்டும்.

—சட்டி பாரதி.

www.thamizham.net - Free E Books No TM 14703



## கைவிலங்கிட்டு இழுத்துச் செல்லலாமா?

டில்லி திகார் சிறைக் கைதிகளிடமிருந்து தலைமை நீதிமன்றத்திற்குத் தந்தி ஒன்று வந்தது. விசாரணைக்காக நீதி மன்றத்திற்கு கூட்டிச் செல்லும்போதுகூட கைவிலங்கிட்டுக் கேவலமாக அழைத்துச் செல்வதாக புகாரில் தெரிவித்திருந்தார்கள் கைதிகள்.

இந்தப் புகாரை நீதிபதி கிருஷ்ணய்யர் தலைமையில் நீதிபதிகள் விசாரித்தனர். கீழ்கண்ட மனிதாபிமானமிக்க உத்தரவை [redacted] நீதிமன்றம் பிறப்பித்திருக்கிறது :—

" கைதியாய் இருப்பதால் மட்டுமே மனித உரிமைகளை இழந்துவிடுவதில்லை. விலங்கு போட குற்றச்சாட்டின் தன்மையை வைத்து முடிவு செய்யக் கூடாது. அந்நபர் காவலரின் பாதுகாப்பிலிருந்து தப்பி ஓடிவிடும்படியான அந்நேரத்தைய அபாயத்தை அடிப்படையாகக் கொண்டே முடிவு செய்யவேண்டும். சரியான ஆதாரம் எழுதப்படவேண்டும். விலங்கிடும் முன்போ அல்லது பின்போ நீதிமன்ற உத்தரவைப் பெற்றாக வேண்டும் "

அதுமட்டுமல்ல—"ஒவ்வொரு கீழ் நீதி மன்றமும் வரும் கைதியிடம் விலங்கிட்டார்களா எனக் கேட்கவேண்டும். விலங்கிட்டார்கள் எனக் கைதி குறிப்பிட்டால், அதிகாரிகள் அதற்கு சரியான காரணம் காட்டும்படி கேட்டு முடிவுசெய்ய வேண்டும் " என்று பொதுக் கட்டளை இட்டிருக்கிறது.

தலைமை நீதிமன்றத்தின் நோக்கமும், உணர்வும் கீழ்நீதிமன்றங்களில் மருந்துக்குக்கூட இல்லையே! பழைய சடங்குகளிலும், சம்பிரதாயங்களிலும் சிறைப்பட்டுள்ளன கீழ்நீதிமன்றங்கள்.

—பொ. இரத்தினம், [redacted]



www.thamizham.net - Free E Books No TM 14703

# வாழைப்பழம்

மிக மலிவாக, எளிதாகக் கிடைக்கும் பொருட்களின் அருமையை நாம் உணர்வதில்லை என்பதற்கு வாழைப்பழம் ஓர் எடுத்துக்காட்டு.

ஒரு வாழைப்பழமானது, ஒரு கோப்பை ஆரஞ்சுப் பழச்சாறுக்கும், இரண்டு ஆப்பிள் பழங்களுக்கும், இரண்டு அத்திப் பழங்களுக்கும், நான்கு பேரீச்சம் பழங்களுக்கும், இருபது திராட்சைகளுக்கும்— சமமான சத்துக்களை உடையது.

விலையோ சுமார் 20 காசுதானே! ஏன் எளியவர்களும் தினமும் சாப்பிட்டு, பணக்காரர்களின் உடல் வலிவைப் பெறக்கூடாது?

வாழைப்பழம் எளிதாகச் சீரணிக்கக்கூடியது. நோயாளிகள் கூடப் பயப்படாமல் சாப்பிட்டு வரலாம். வளரும் குழந்தைகளுக்கு வாழைப்பழமும் பசும்பாலும் நல்லஊட்டம்தரும் உணவு. மலச்சிக்கலுக்கு மிக இயற்கையான மருந்து வாழைப்பழம். நாள்தோறும் இரு வாழைப்பழம் சாப்பிட்டால் நல்ல உடல் நலத்தோடு நோயின்றி இருக்கலாம்.

சிறுமலைப்பழம், பேயன், கற்பூரம், பச்சை நாடன், செந்திரம், கதலி, மட்டு, செவ்வாழை, ரஸ்தாளி, பூவன், போன்ற பல வகைகள் இருப்பினும், எளிதாக விலை குறைவாகக் கிடைப்பது பூவன்தான், என அசட்டை செய்யாதீர்கள். மற்ற வாழைப்பழங்களில் உள்ள எல்லாச் சத்தும் இதில் அதிகமாகவே இருப்பது இயற்கை நமக்கு அளித்துள்ள தனிச்சலுகையாகும்.

—சித்தன்



www.thamizham.net - Free E Books No TM 14703

## 'பாக்கி'கள் நமக்கிருந்தால்..

வருமானவரி இலட்சக் கணக்கில் பாக்கியுள்ள கோடீஸ்வரர்களின் பட்டியலைப் பாராளுமன்றத்தில் அறிவித்திருக்கிறார்கள். சில முக்கிய பேர்வழிகளின் பாக்கிகள் :—

| | ரூ. இலட்சம். | | ரூ. இலட்சம் |
|---|---|---|---|
| ஹேமமாலினி | 26 58 | விஜய நிர்மலா | 10·0 |
| ரேகா | 9·89 | எம்.ஆர். ராதா | 8·5 |
| ராஜேஷ்கன்னா | 7·00 | சாவித்திரி | 6·9 |
| பிரேம் நசீர் | 5·90 | | |

நமது முதலமைச்சரின் வரிபாக்கி ரூ. 7·81 இலட்சம். இதில் ரூ. 3·22 இலட்சம் வரிபாக்கியாகவும், ரூ. 4.59 இலட்சம் வசூலிக்க முடியாத வரி பாக்கியாகவும் இருக்கிறது. அவருக்கு 2 ஆண்டுகளுக்கு முன்பு ரூ. 15 இலட்சம் பாக்கி இருந்தது. ஆனால், 2 ஆண்டுகளாக சினிமாவில் நடிக்காமலேயே ரூ. 7 இலட்சம் கட்டியிருக்கிறார்.

இலட்சக்கணக்கில் உள்ள இந்தப் பாக்கியைக் கட்டாததனால் மாண்புமிகு முதலமைச்சருக்கோ, மற்ற நட்சத்திரங்களுக்கோ பெரியஆபத்து ஒன்றுமில்லை. சல்லிக்காசு யாரும் தொடமாட்டார்கள். கோர்ட்டில் அப்பீல் செய்து ஆண்டுக்கணக்கில் வழ வழக்கலாம்.

ஆனால் நமது சாமான்யர்கள் தொலைபேசிக் கட்டணம் கட்ட 2 நாள் தாமதித்தாலும் பாரபட்சமின்றி லயன் துண்டிக்கப்படும். மின்சார கட்டணம் கட்டாவிட்டால் வீடு இருட்டாகும். மாதம் வெறும் 50 காசுக்குத் தண்ணீர் பில் குடிநீர் வடிகால் வாரியம் அனுப்புகிறது அதில் அநாகரிகமான முதல் வரியே மிரட்டல் : "இந்த 50 காசை 15 நாளில் கட்டாவிட்டால் தண்ணீர் நிறுத்தப்படலாம். 50 காசுடன் ரூ. 50/- அபராதமும், துண்டிப்பு இணைப்பு செலவுகளும் சேர்த்துக் கட்டினால் தண்ணீர் மீண்டும் கிடைக்கும்."

—ஸ்டெனிஸ் லாஸ்

www.thamizham.net - Free E Books. No TM 14703

முன்பு "பூச்செண்டு" என்ற மாணவர்கள் நடத்திய இதழ் வந்ததே அது என்னவாயிற்று? —ஆர். ராஜாராம், ஐயனூர்.

பூச்செண்டிலிருந்து உதிர்ந்த மலர்கள் இன்று பத்திரிகை உலகில் பல திசைகளிலும் பிரகாசித்து வருகிறார்கள். பூச்செண்டில் அன்று பங்குபெற்றவர்கள்தான் 'சுட்டி'யிலும் இருக்கிறார்கள். ஏதோவொரு காரணத்தினால் பூச்செண்டு தனது பயணத்தைத் தேக்கிக்கொண்டது. இன்று சுட்டி அதனைத் தொடர்ந்து எடுத்துச் செல்லும். பழைய வாசகர்கள் தொடர்புகொள்க.

—சுட்டியார்

Phone Office: 37334 Branch: 444635

RAVI HOME APPLIANCES

71, NAINIAPPA NAICKEN ST., MADRAS-3
(Near C.L.S. Book Shop)

Branch: 25, DURAISWAMI ROAD,
T. NAGAR, MADRAS-17.

Dealers in: Mixers, Radios, Televisions. Stereos, Water Heaters, Grinders, Fans, Anjali Kitchenware and all other Home Appliances.

Phone: 431088

Vasu Chemical Industries

Manufacturers and Suppliers of
Wax Crayons, Sodium Hypochlorite Bleaching Solution, Alumina Hydrate Liquid Detergent and Printing Inks.

26, GUINDY INDUSTRIAL ESTATE (NORTH)
EKKADUTHANGAL, MADRAS-97.

www.thamizham.net - Free E Books No TM 14703

# முதல் இந்திய செய்தித்தாள்

இந்திய பத்திரிகைத்துறையின் வயது 200. உலகளவில் செய்தித்தாள் தோன்றியது 1618-இல். முதல் இந்திய செய்தித்தாள், 'பெங்கால் கெஸட்', கல்கத்தாவில் 29-1-1780 சனிக்கிழமை வெளியானது. 12" நீளம், 8" அகலம் கொண்ட இரு தாள்களில் பக்கத்திற்கு 3 பத்திகளாக இருபுறமும் ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டிருந்தது. ஜேம்ஸ்அகஸ்டஸ் ஹிக்கி என்பவரே இதன் உரிமையாளர், ஆசிரியர்.

பெங்கால் கெஸட் முற்றிலும் லாபநோக்குடனேயே நடத்தப்பட்டது. கல்கத்தாவின் மத்தியதர ஆங்கிலேயரும் வியாபாரிகளுமே இதன் முதல் வாசகர்கள். கவர்ச்சிமிக்க தலைப்புச் செய்திகள் இதிலில்லை. அச்சுக்கள் ஒரே ரகமானவை. இங்கிலாந்து நிகழ்ச்சிகள் பற்றிய தலையங்கம், வாசகர் கடிதங்கள், வியாபார விளம்பரங்கள், சமூகசெய்திகள் இதில் இடம் பெற்றிருந்தன. முதல் இதழிலேயே திருமண, நிச்சயதார்த்த அறிவிப்புகள் வெளியாயின. கல்வி வளர்ச்சியில் இதற்கு அக்கறையில்லை.

அரசியலைவிட தனி மனிதர்களையே இது பகைமையுடன் விமர்சித்தது. அரசின் தவறுகளை வெளியிடுவதில் தனி ஆர்வம் காட்டியது. விளைவாக அஞ்சல் சலுகைகளை இழந்தது. 'இந்தியன் கெஸட்' என்ற போட்டிப் பத்திரிகை அதிக அஞ்சல் சலுகைகளுடன் பிரசவித்தது. கோபமுற்ற ஹிக்கியின் பேனா அப்போதிருந்த 'வாரன் ஹேஸ்டிங்ஸ்' பிரபுவை கடுமையாகத் தாக்கி குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியது. தனது அநாகரிகமான எழுத்துக்களால் பெங்கால் கெஸட் 2 ஆண்டுகளிலேயே அஸ்தமித்து விட்டது.

10 ஆண்டுகளுக்குள் பம்பாய், சென்னை, கல்கத்தாவிலிருந்து 15 பத்திரிகைகள் வெளியாயின. அரசியலை பத்திரிகையில் புகுத்திய முதல் நபர் ஹிக்கியே. பத்திரிகையின் சக்தியை முதலில் வெளிப்படுத்திய பெருமை பெங்கால் கெஸட்டைச் சேர்ந்தது.

—நிலா

www.thamizham.net - Free E Books No TM 14703

**YOUTH ASSOCIATES**
M3/B EX-MILITARY GROUNDS
**ASHOK NAGAR, MADRAS-600 083**

Rush up for Admissions. Sub: 15.30 Rs./Month.
OUR WAY IS FULL OF FUN.

---

**RAJAMANNAR**

**NIRANJANA PHARMACY**

46, SINGARA CHARI STREET

**TRIPLICANE, MADRAS-600 005.**

---

LECTURES ON COMPANY LAW
By BINOY CHAKARABORTY
**Price Rs. 35/- 1st Edition 1981**
**CHATTERJEE PUBLISHING CONCERN**
42/1, BENIATOLA LANE, CALCUTTA-9.

---

SRI PARTHASARATHY KALYANA NILAYAM
For Middle Class People an Ideal Place for Celebrating Marriages. Accomodations are Available.
Please contact:
**ANANDA FLOUR & CONDIMENTS MILL,**
Grinder for Govt. Hospitals,
21, V. R. PILLAI ST., TRIPLICANE, MADRAS-5




www.thamizham.net - Free E Books No TM 14703

*அறிவியல் :*

# கனவுகள் வளர்க்கும் இயந்திரம் !

சுகமான கனவுகளை உருவாக்குவதற்கென்றே தற்போது விநோதமான இயந்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த உளவியல் நிபுணர், டாக்டர் கெய்த் இதனைக் கண்டுபிடித்துள்ளார்.

தூங்கிய சிறிது நேரத்தில் ஒருவர் கனவு காண்கிறார் என்று அறியப்படும்போது அதாவது ஒருவர் ஒரு நிமிடத்திற்கு 18 முறை ஆழமாக மூச்சை இழுத்து விடுவாரேயானால் அவரது மனதில் கனவுகள் அடித்தளமிட்டு விட்டன என அறிந்து கொள்ளலாம்.

அப்போது டாக்டர் கெய்த்தின் கண்டுபிடிப்பான கனவு இயந்திரத்தின் கிளிப் போன்ற பகுதியைச் சம்பந்தப்பட்டவரின் மூக்கில் பொருத்தி அதன்வழி 150வாட் சக்திகொண்ட அலைகள் அனுப்பப்படுகின்றன. இந்த அலைகளே சம்பந்தப்பட்ட நபருக்குப் பிடித்தமான கனவுகளை உருவாக்குகின்றன.

கனவு காண்பதற்கு அவனைச் சுற்றிலும் உள்ள புறச்சூழலும் ஒரு காரணமாகும். அந்தவகையில் நல்ல கனவுகளுக்கு புறத்தூண்டுதல்களை இக்கனவு இயந்திரம் உருவாக்குகிறது.

குறிப்பாக, சாதாரண கனவு காணும்போது போர்த்தி இருக்கின்ற போர்வை நழுவி விழுந்துவிட்டால்கூட அவ்வேளையில் பனித் தொட்டியில் தவறி விழுந்ததுபோல் கனவுகள் உருவாகும் என்று டாக்டர் கெய்த் குறிப்பிட்டார்.

கனவு இயந்திரத்தின்மூலம் உருவாகும் சுகமான கனவுகளைத் தூக்கத்திற்குப் பின்னரும் சம்பந்தப்பட்டவர் மனதில் வைத்துக்கொள்ள முடியும். எனவே இத்தகைய அரைத் தூக்க கனவுகளால் உண்மையில் அதிகம் பலனடைகிறவர்கள் எழுத்தாளர்கள், கவிஞர்கள், இசைத்துறையைச் சேர்ந்தவர்கள், ஓவியர்கள் ஆகியோரே ஆவார். இவர்களது கற்பனை படைப்புகளுக்கு இது ஒரு குறுக்குவழி என்று டாக்டர் கெய்த் சொன்னார்.

கற்பனைசக்தி வறண்டு போய்விட்ட நம்மூர் டி.வி. காரர்களையும், மசாலா பத்திரிகை எழுத்தாளர்களையும் முன்னிட்டாவது அரசு இந்த இயந்திரத்தை உடனே இங்கு வரவழைத்தாக வேண்டும்!

—அக்கினி

www.thamizham.net - Free E-Books No TM 14703



# வாசகர்களிடம் கொஞ்சம் தனியாக...

ந்த இதழின் சிறப்புக்குத் துணை நின்றவர்கள் :—

மாணவர்கள் : கவிசா சிசுபரன், பாலாஜி, சுதீந்தரன் ருமூர்த்தி, ஆர். இராமகிருஷ்ணன், சீனிவாசன்.

இன்னும் பின்னணியில் பேருதவி புரிந்த விளம்பரம் ரும்பா ஆசிரியர்கள், கலைஞர்கள், புதியவர்கள்.

அட்டை உள் ஓவியங்கள் : எம். ஷேக் அப்துல்காதர், ம்மல்.

இவ்விதழ் பற்றிய விமர்சனங்கள், சுட்டியின் அமைப்பிற் கேற்ற படைப்புகள், ஆக்கப்பூர்வமான ஆலோசனைகள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

மாறூல், பிரபல எழுத்தாளர்களின் படைப்புகளுக்குச் சுட்டியில் இடமில்லை.

புதிய எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஓவியர்கள், பாரபட்ச மின்றி, சிபாரிசின்றி கவனிக்கப்படுவார்கள்.

ஒவ்வொரு மாதமும் 15ஆம் தேதி சுட்டி வெளிவரும்.

12 இதழ்கள், அஞ்சலில் பெற ஆண்டு சந்தா ரூ. 3·00 பணவிடை செய்யலாம்.

முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தமிழகமெங் கும் தேவை.

50,000 பேர்களைக் குறைந்த செலவில்எட்ட வியாபாரிகள் சுட்டியில் விளம்பரம் செய்யலாம். [¼ பக்கம் ரூ. 30]

எல்லாத் தொடர்புகளுக்கும்—[முகவரி மாற்றம் கவனிக்க]

ஆசிரியர், சுட்டி,
17, கஜபதி தெரு, சென்னை—600 030.

---

அறிமுகம் வேண்டும் பத்திரிகைகள், புத்தகங்கள் 'சுட்டி'க்கு அனுப்பினல் எதிரொலிக்கப்படும்.

www.thamizham.net - Free E Books No TM 14703

www.thamizham.net - Free E Books No TM 14703

கட்டி மாத இதழ் 15, மே 1981 Regd. No. TN/MS(N)/317
Licenced to post without prepayment Licence. No. TN/MS(N)/ NPP-56



# AMRUTANJAN




Your medicine chest
for aches, colds and sprains

**AMRUTANJAN LTD., MADRAS-4.**


ஆசிரியர் : நிர்மலா சுந்தர், எம்.எஸ்ஸி.; வெளியிடுவோர் : கமலா நாராயணன், 17, கஜபதி தெரு, சென்னை-30.
அச்சிடுபவர் : J. S. கிட்

www.thamizham.net - Free E Books No TM 14703